# 5 குலமுதுவர் ஆபிரகாமின் அழைப்பு



படம் 5.1 - ஆபிரகாம்

ஆதாம், ஏவாள் பாவம் செய்தபின், ஒரு மீட்பரை அனுப்பி மனித இனத்தைப்பாவத்திலிருந்துவிடுவிப்பதாகஆண்டவர்வாக்குறுதியளித்தார். அந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காக ஆண்டவர் தேர்ந்து கொண்ட முதலாவது நபர் ஆபிரகாம் ஆவார். இவர் குலமுதுவர் என அழைக் கப்பட்டார். இவ்வாறு ஆண்டவர் ஆபிரகாமைத் தேர்ந்து கொண்டமை, அவருக்களித்த சிறப்பான அழைப்பின் ஆரம்பமாகும். அந்த அழைப்பு திருவிவிலியத்திலே இவ்வாறு குறிப்பிடப்படுகின்றது.

ஆண்டவர் ஆபிராமை நோக்கி, ''உன் நாட்டிலிருந்தும் உன் இனத் தவரிடமிருந்தும் உன் தந்தை வீட்டிலிருந்தும் புறப்பட்டு நான் உனக்குக் காண்பிக்கும் நாட்டிற்குச் செல். உன்னை நான் பெரிய இனமாக்குவேன். உனக்கு ஆசி வழங்குவேன். உன் பெயரை நான் சிறப்புறச் செய்வேன். நீயே ஆசியாக விளங்குவாய்...'' ஆண்டவர் ஆபிராமிற்குக் கூறியபடியே அவர் புறப்பட்டுச் சென்றார். அவரு டன் லோத்தும் சென்றார். ஆபிராம் ஆரானை விட்டுச் சென்ற போது அவருக்கு வயது எழுபத்தைந்து. ஆபிராம் தன் மனைவி சாராளையும் தம் சகோதரன் லோத்தையும் உடனழைத்துச் சென்றார். அவர்கள் ஆரானில் சேர்த்திருந்த செல்வத்துடனும் வைத்திருந்த ஆள்களுடனும் கானான் நாட்டிற்குப் புறப்பட்டுச் சென்று அந் நாட்டைச் சென்றடைந்தனர்... ஆண்டவர் ஆபிராமிற்குத் தோன்றி, '' உன் வழிமரபினர்க்கு இந்நாட்டைக் கொடுப்பேன்'' என்றார்.

தொ. நூ. 12 : 1-2, 4- 5, 7




இலவச விநியோகத்திற்காக

ஆபிரகாமின் பிறந்த இடம் ஊர் என்ற நகரமாகும். அவர் தனது தந்தை மற்றும் உறவினருடன் ஆரானில் வாழ்ந்தார். அங்கு வாழும்போது ஆண்டவரிடமிருந்து அவர் ஒரு விசேட அழைப்பைப் பெற்றார். அவ்வழைப்புக்கேற்ப அவருக்கு கானான் என்ற நாட்டிற்குச் செல்ல நேர்ந்தது. அது வாக்களிக்கப்பட்ட நாடாகும். கீழே காணும் படத்தில் ஊர், ஆரான், கானான் ஆகிய இடங்களை அறிந்து கொள்ளுங்கள்.





ஆபிரகாமின் அழைப்பில் இரு பிரிவுகள் உள.

1. தியாகம்
2. சவால்



ஆபிரகாமுக்கு அவரது தாய்நாடு, உறவினர், தந்தையின் இல்லம் அனைத்தையும் கைவிட்டு ஆண்டவர் காட்டிய கானான் நாட்டிற்குச் செல்ல வேண்டி ஏற்பட்டது. தனது துன்பம், சுகபோகம், வேதனை, மகிழ்ச்சி ஆகியவற்றைப் பகிர்ந்துகொள்ளுவதற்கு உறவினர்களுடனான உறவு அவசியமாயினும் அவையனைத்தையும் கைவிட்டு ஆண்டவரில் முழு நம்பிக்கையையும் வைத்து இப்பயணத்தை மேற்கொள்ள வேண்டியதாயிருந்தது. ஆபிரகாம் ஆண்டவரிடமிருந்து பெற்ற அழைப்பை முழுமையாக விசுவசித்தார். அதனால் ஆபிரகாம் ''விசுவாசத்தின் தந்தை'' என அறிமுகப்படுத்தப்படுகிறார். ஆண்டவரில் முழு நம்பிக்கையையும் வைத்துச் செயற்படுவதற்கு இந்நிகழ்வு எமக்கொரு உதாரணமாக இருக்கின்றது.




பிள்ளையில்லாது, முதுமையில் ஆபிரகாமின் மூலம் மாபெரும் இனத்தை ஏற்படுத்துவதாக ஆண்டவர் அளித்த வாக்குறுதியை மறுக்காமல் ஆபிரகாம் ஏற்றுக் கொண்டார். ஆரான் நாட்டில் சேகரித்த அனைத்து வளங்களையும் ஆள்களையும் சேர்த்து 800 மைல் (1300 கிலோ மீற்றர்) தூரத்திலிருந்த ஒருபோதும் அறிந்திராத கானான் நாட்டிற்குச் செல்ல வேண்டி ஏற்பட்டது. இவையனைத்தும் ஆபிரகாம் முகங்கொடுத்த சவால்களாகும்.

## ஆபிரகாம் பெற்ற வாக்குறுதி

ஆண்டவரின் குரலுக்குச் செவிசாய்த்து அதன்படி வாழும்போது சில தியாகங்களைச் செய்ய வேண்டி ஏற்படும். சில சவால்களுக்கு முகங்கொடுக்க நேரிடும். ஆயினும் அனைத்துமே தியாகங்கள், சவால்களினால் மட்டும் நிறைவுபெற்று விடாது. இறைசித்தத்தை நிறைவேற்றுபவர்களுக்கு ஆண்டவரின் ஆசீர்வாதம் கிடைக்கின்றது. ஆபிரகாம் ஆண்டவரிடமிருந்து பெற்றுக்கொள்ள இருக்கும் அருள், அவர் ஆண்டவரிடமிருந்து பெற்றுக் கொண்ட வாக்குறுதிகள் இரண்டு விடயங்களில் காட்டப்படுகிறது. அவை யாவன :-

1. ஆபிரகாமிலிருந்து ஒரு பெரிய இனம் தோன்றுதல்
2. ஆபிரகாமின் வழி மரபினருக்கு ஒரு நாட்டை அளித்தல்

ஆபிரகாமிற்கு வயது 75, அவர் மனைவி சாராவுக்கு வயது 65. வயதான அவர்களுக்கு ஒரு மகனைப் பெற்றுக் கொடுப்பதன் வழியாக ஒரு பெரிய இனத்தை உருவாக்குவதே இறைவனின் நோக்கமாக இருந்தது. அந்த வாக்குறுதிக்கேற்பத் தோன்றிய மாபெரும் இனம்தான் இஸ்ரயேல் மக்களாவர். அவர்களுக்கு அளித்த வாக்குறுதிக்கேற்பக் கிடைக்கப் பெற்ற நாடு ''வாக்களிக்கப்பட்ட நாடு'' ஆகும்.

### ஆபிரகாமின் அழைப்பிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய முன் மாதிரிகைகள்

- மாணவர்களாகிய உங்களை ஆண்டவர், பலவித பணிகளுக்காக அழைக்கின்றார். அவ்வழைப்பை ஏற்றுக்கொள்ளுவதற்கு நீங்கள் ஆயத்தமாக இருக்க வேண்டும்.
- பெற்றுக்கொண்ட அழைப்புக்கேற்ப இயலுமானவரை ஆண்டவருக்குப் பணியாற்ற வேண்டும்.
- ஆண்டவரில் முழு நம்பிக்கை வைத்து இறைவார்த்தையை ஏற்று அதற்கேற்ப வாழ்வை அமைத்துக்கொள்ள வேண்டும்.
- எமது வாழ்க்கைப் பயணத்திலே பலவித தியாகங்களைச் செய்ய வேண்டி ஏற்படும் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

- எமது வாழ்க்கையிலே தீர்மானம் எடுக்க வேண்டிய சந்தர்ப்பங்களில் இறைசித்தத்தை ஏற்று வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

- வாழ்வில் சந்திக்கும் சவால்களுக்கு வெற்றியாக முகங்கொடுப்பதற்காக அடிக்கடி செபிக்க வேண்டும்.

## செயற்பாடு

1. ஆபிரகாமின் அழைப்பின் இரு பிரிவுகளையும் எழுதுக.
2. நம்பிக்கை குறைந்த உமது நண்பனுக்கு அல்லது நண்பிக்கு ஆண்டவரில் நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கு எவ்வாறு வழிகாட்டுவீர் என்பதை மூன்று காரணிகள் மூலம் காட்டுக.
3. கீழ்க்காணும் சந்தர்ப்பங்களின்போது இச்சவால்களை வெற்றி கொள்வதற்கு எவ்வாறு செயற்படுவீர் என்பதை எழுதிக் காட்டுக.
   - i. உமது நல்ல நண்பன் உம்முடன் மனத்தாங்கலாக இருக்கும்போது
   - ii. விளையாட்டுப் போட்டியில் நீர் தோல்வியடையும்போது
   - iii. உல்லாசப் பயணம் செல்வதற்குப் பெற்றோர் அனுமதி கிடைக்காதபோது
   - iv. உமது தாய் சுகயீனமாக இருக்கும்போது
   - v. உமது வாழ்விலே துன்பம், பிரச்சினை ஏற்படும்போது
4. ஆபிரகாமுக்கு ஆண்டவர் அளித்த வாக்குறுதிகள் இரண்டை எழுதுக.
5. ஆபிரகாமின் வாழ்விலிருந்து நீர் பெற்றுக்கொள்ளக்கூடிய மாதிரிகைகள் மூன்றை எழுதுக.



**வாழ்க்கைக்கு...**

- AßÓõh® Áõ Ì ÂÀ ö£ØÖU öPõÒÐ® AøÇ¨¦U Pø Í HØÖU öPõÒ÷Áõ®.

- Áõ Ì Âß AßÓõh ÷uøÁP Î ß÷£õ x |®¤U øP²hß B s hÁ›h® v¸®¦÷Áõ®.